தமிழகத்தில் முதல்முறையாக

இரண்டு கைகளையும் இழந்த இளைஞர் கார் ஓட்டுவதற்கான லைசென்ஸ் பெற்று சாதனை

கால்களால் கார் ஓட்டும் மாற்றுத் திறனாளி இளைஞர் தான்சென்.

● சென்னை

இரண்டு கைகளையும் இழந்த இளைஞர், தமிழகத்தில் முதல் முறையாக கார் ஓட்டுவதற்கான லைசென்ஸ் பெற்று சாதனை படைத்துள்ளார்.

சென்னை வியாசர்பாடி பெரியார் நகரைச் சேர்ந்தவர் தான்சென்(31). தனது பத்தாவது வயதில் மின்சார விபத்தில் மூட்டுக்கு கீழ் இரண்டு கைகளையும் இழந்துவிட்டார். தொடர் முயற்சியால் பொறியியல் படித்து முடித்த பின், பி.எல். படித்த அவர் எம்.எல். படித்து வருகிறார். இவருக்கு திருமணமாகி, ஒன்றரை வயதில் மகள் உள்ளார்.

தொழிலதிபர் ஸ்ரீவாரி சங்கர், நடிகர் ராகவா லாரன்ஸ் உள்ளிட்டோர் உதவியுடன் கார் ஓட்டுவதற்கு கற்றுக் கொண்ட தான்சென், ஓட்டுநர் உரிமம் பெற விண்ணப்பித்தபோது நடைமுறைச் சிக்கல்கள் ஏற்பட்டன. இதையடுத்து, சென்னை கே.கே. நகரில் உள்ள புனர்வாழ்வு மருத்துவ மனையின் உதவியை நாடினார்.

அங்கு, அவருக்கு ஏற்ப காரின் வடிவமைப்பை மாற்றி, தானியங்கி கியர் முறையைக் கையாளும்படி அறிவுறுத்தப்பட்டது. மருத்துவ மனையின் உடலியல் மருத்துவம் மற்றும் மறுவாழ்வியல் துறை இயக்குநர் திருநாவுக்கரசு மற்றும் மருத்துவர்கள் வழிகாட்டுதலின்படி ரெட்டேரி ஆர்டிஓ அலுவலகத்தில் தான்சென் ஓட்டுநர் உரிமம் பெற்றுள்ளார். தமிழகத்திலேயே முதல் முறையாகவும், நாட்டில் மூன்றாவது நபராகவும் இரண்டு கைகள் இல்லாத ஒருவர், கடந்த வாரம் ஓட்டுநர் உரிமம் பெற்றது குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக உடலியல் மருத்துவம் மற்றும் மறுவாழ்வியல் துறை இயக்குநர் பி.திருநாவுக்கரசு கூறும்போது, "மாற்றுத் திறனாளியான தான்சென் கார் ஓட்டுவதைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்த நாங்கள், மற்றவர்களின் பாதுகாப்பையும் கவனத்தில் கொண்டோம். முழங்கை மூட்டு கைகளிலேயே காரின் 'ஸ்டேரிங்' பிடித்து ஓட்டிய அவருக்கு, பேலன்ஸ் சரியாக இருக்கிறதா என்பதையும் கண்டறிந்தோம். அவர் கைகளின் முட்டி மற்றும் கால்கள் மூலம் காரை ஓட்டி காண்பித்தார். தானாக காரின் கதவைத் திறப்பது, சீட் பெல்ட் போடுவது, அவசர நேரத்தில் பிரேக் பிடிப்பது, ஹாரன் அடிப்பது போன்றவற்றை பல்வேறு வகையில் மூன்று மாதங்களாக கண்காணித்து, சில பயிற்சிகள் வழங்கப்பட்டன. அவரது காரின் வடிவமைப்பில் சில மாற்றங்கள் செய்த பிறகு, அவர் நன்றாக கார் ஓட்டினார். அதனால், அவருக்கு ஓட்டுநர் உரிமம் பெறுவதற்கான பரிந்துரை வழங்கப்பட்டது. தற்போது ஓட்டுநர் உரிமம் பெற்றுள்ள அவர், மற்றவர்களைபோல நன்றாக கார் ஓட்டுகிறார் என்றார்.

தான்சென் கூறும்போது, "எனது கார் 'ஆட்டோமெடிக் கியர் மற்றும் பிரேக்' தன்மை கொண்டது. இதனால், திருப்பதி மலையிலும் தானாக கார் ஓட்டினேன். எனக்கு உதவிய நடிகர் ராகவா லாரன்ஸ், ஸ்ரீவாரி சங்கர் மற்றும் மருத்துவர்கள், ஆர்டிஓ உள்ளிட்டோருக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்" என்றார்.

சதுரகிரி செல்ல நாளை முதல் 4 நாட்கள் அனுமதி

● வத்திராயிருப்பு

சித்திரை மாத பிரதோஷம் மற்றும் அமாவாசையை முன்னிட்டு சதுரகிரி சுந்தர மகாலிங்கம் கோயிலுக்கு பக்தர்கள் செல்ல நாளை (மே 5) முதல் 4 நாட்கள் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஸ்ரீவில்லிபுத்தூர் - மேகமலை புலிகள் காப்பகத்தில் சதுரகிரி சுந்தரமகாலிங்கம் கோயில் அமைந்துள்ளது. கோடை வெயில் காரணமாக ஆறுகள், ஓடைகளில் நீர்வரத்து இன்றி, வனப்பகுதி வறண்டு காணப்படுவதால் எளிதில் தீப்பற்றக்கூடிய பொருட்களை பக்தர்கள் கொண்டு செல்லக் கூடாது என வனத்துறையினர் அறிவுறுத்தி உள்ளனர்.

மாநகராட்சி குடிநீர் பந்தல் அமைக்க எதிர்பார்ப்பு

● மதுரை

கோடை காலம் முடியும் வரை, மதுரை மாநகரில் பொது மக்களுக்கு குடிநீர் பந்தல் அமைக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

மதுரையில் கோடை வெயில் கடுமையாக உள்ளது. மக்கள் சாலைகளில் நடமாட முடியாத அளவுக்கு வெப்பத்தின் தாக்கம் அதிகரித்து உள்ளது. இந்நிலையில், பொது இடங்களில் மக்கள் குடிநீருக்காக அலையும் நிலை ஏற்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சிப் பகுதியில் பல்வேறு இடங்களில் குடிநீர் பந்தல் அமைக்கப்பட்டுள்ளது. அந்த பந்தல்களில் மாநகராட்சிப் பணியாளர் ஒருவரை நியமித்து, குடிநீர் விநியோகம் முறையாக செய்யப்படுகிறது. இதேபோல், மதுரை மாநகரிலும் முக்கிய இடங்களில் மாநகராட்சி குடிநீர் பந்தல் அமைக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

தமிழ்நாடு அரசு
நிதித் துறை, சென்னை-9

நாள் : 03.05.2024

செய்தித்தாள் அறிவிப்பு

தமிழ்நாடு அரசு நிதித்துறையின் **29.05.2020 ஆம் நாளிட்ட 483(L)/W&M-II/2020** அறிவிக்கையின் வரையறைகளின்படி வழங்கப்பட்ட **5.46% தமிழ்நாடு மாநில வளர்ச்சிகடன் 2024 நிலுவைத் தொகையானது 03.06.2024 அன்று 02.06.2024** ஆம் நாள் உட்பட்ட உரிய நாளது வரையிலான வட்டித் தொகையுடன் திருப்பிச் செலுத்தப்படும் என்று பொதுத் தகவலுக்காக அறிவிக்கப்படுகிறது. யாதொரு மாநில அரசால், 1881 ஆம் ஆண்டு செலாவணி முறிச்சட்டத்தின் கீழ், மேற்சொன்ன நாளினை விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டிருப்பின், அந்த மாநிலத்தின் தொகை செலுத்தும் அலுவலகங்களால், முந்தைய அலுவலகப் பணிநாளில் திருப்பிச்செலுத்தப்படும். 03.06.2024 ஆம் நாளிலிருந்தும் அதற்கு பின்னரும் இக்கடனுக்கு வட்டித் தொகை சேராது.

2. 2007ஆம் ஆண்டு அரசு கடன் பத்திரங்களின் ஒழுங்குமுறை விதிகளிலுள்ள 24(2) மற்றும் 24(3)ஆம் துணை ஒழுங்குமுறை விதிகளின்படி, பொதுதுணை பேரேட்டு படிவத்தில் அல்லது மூலப் பொது துணைப் பேரேட்டு கணக்கில் அல்லது பங்கு முதல் சான்றிதழில், அரசு கடன் பத்திரங்களை வைத்திருக்கும் பதிவு பெற்ற நபர் ஒருவருக்கு, அவருடைய வங்கி கணக்கில் அல்லது மின்னணு பதிவு மூலம் நிதிகளை வரவு வைக்கும் வசதியுள்ள யாதொரு வங்கியில் கணக்கு வைத்திருக்கும் அவருடைய வரவுக் கணக்கில் உரிய விவரங்களை சேர்த்து, தொகை செலுத்துவதற்கான ஆணை வழங்குவதன் மூலம் முதிர்வுத் தொகை வழங்கப்படும். கடன் பத்திரங்களை பொறுத்தமட்டில், தொகை செலுத்தும் நோக்கத்திற்காக, நேர்விற்கேற்ப அசல் சந்தாதாரர் அல்லது இத்தகைய அரசு கடன் பத்திரங்களை வைத்திருப்பவர் வட்டித்தொகை செலுத்துவதற்காக முகப்பிடப்பட்டுள்ள/பதிவு செய்யப்பட்டுள்ள வங்கிக்கு அல்லது கருவூலத்திற்கு மற்றும் சார் கருவூலத்திற்கு அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் கிளைக்கு நேர்விற்கேற்ப அவர்களுடைய வங்கிக் கணக்கின் உரிய விவரங்களை அளிக்க வேண்டும்.

3. இருப்பினும், வங்கிக் கணக்கில் உரிய விவரங்கள் இல்லாத/மின்னணு மூலம் நிதிகளை வரவு வைப்பதற்கு ஆணை பிறப்பிக்கப்படாத நேர்வில், உரிய நாளில் தொகையை திருப்பிச் செலுத்துவதற்கு ஏதுவாக, **5.46% தமிழ்நாடு மாநில வளர்ச்சிகடன், 2024** தொடர்பான கடன் பத்திரங்களை வைத்திருப்பவர்கள், அவர்களுடைய கடன் பத்திரங்களை, 20 நாட்களுக்கு முன்னதாகவே, பொதுக் கடன் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். கடன் தொகையை திருப்பிச் செலுத்துவதற்காக கொடுக்கப்படும் கடன் பத்திரங்களின் பின் பக்கத்தில், கீழேகுறிப்பிடப்பட்டுள்ளவாறு உரியமுறையில் எழுதி கையொப்பமிட வேண்டும்.

"சான்றிதழுக்குரிய அசல் தொகை பெறப்பட்டது"

4. பாரத ஸ்டேட் வங்கியின் கிளை ஒன்றில் கருவூலப் பணிகள் மேற்கொள்ளப்படும் இடங்களில், இக்கடன் பத்திரங்கள், பங்கு முதல் சான்றிதழ்கள் வடிவில் இருக்குமாயின், சம்பந்தப்பட்ட வங்கியின் கிளையில்தான் ஒப்படைக்க வேண்டுமே தவிர கருவூலத்திலோ அல்லது சார் கருவூலத்திலோ ஒப்படைக்கக்கூடாது என்பதை குறிப்பாக கருத்தில் கொள்ள வேண்டும்.

5. கடன் தொகை திருப்பிச் செலுத்தக் கோரி, கடன் பத்திரங்கள் முகப்பிடப்பட்டுள்ள இடங்கள் நீங்கலாக பிற இடங்களில் தொகையைப் பெற விரும்புவோர், கடன் பொறுப்பைத் தீர்க்கும் வாசகத்தை அப்பத்திரங்களின் பின்புறம் உரியவாறு எழுதி கையொப்பமிட்டு, சம்மந்தப்பட்ட பொதுக்கடன் அலுவலகத்திற்கு பதிவு அஞ்சல் மற்றும் காப்புறுதி அஞ்சல் மூலம் அனுப்பவேண்டும். தமிழ்நாடு மாநிலத்தில், அரசு கருவூலப் பணிகளை மேற்கொள்கின்ற யாதொரு கருவூலம் / சார் கருவூலம் அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் கிளைகளில் செலுத்தத் தக்க கேட்புக் காசோலை ஒன்றை வழங்குவதன் மூலம், பொதுக் கடன் அலுவலகம், தொகை வழங்கும்.

த. உதயச்சந்திரன்
அரசு முதன்மை செயலாளர்
நிதித் துறை, சென்னை- 09.

செ.ம.தொ.இ./ 466 /வரைகலை/2024

வரி விளம்பரங்கள்

தொழில்

தொழில் சேவை

Apple iPhone 1+1 பகுதி நேரம் ஏஜென்டுகள் மற்றும் டீலர்கள் தேவை புக்கிங் ஆர்டர் ரூ.1 லட்சம் வரை. Star Magic Ph: 7603864578 Branches, 28, KK Street, Arcot -5,

கல்வி

ஆசிரியர் / ஆசிரியை தேவை

Ponmani
Mat. Hr. Sec. School
Usilampatti - 625 532
We are looking for enthusiastic, innovative and dedicated teachers.
Wanted Teachers
D.T.Ed., U.G.,B.E.,P.G. with B.Ed in all subjects can apply.
Good Communication Skill and vast subject Knowledge are expected.
Mail your resume to
ponmanischool@gmail.com
Cell: 908 798 1608
9585 333 590

பொது

பொது அறிவிப்பு

காணவில்லை

விருதுநகர் மாவட்டம், ராஜபாளையம் வட்டம், கதவு எண்.21/11, விவேகானந்தர் தெருவில் குடியிருக்கும் நடராஜன் அவர்கள் குமாரர் மகேஸ்வரன் ஆகிய எமது கட்சிக்காரர் கடந்த 25.04.2024ம் தேதியன்று காலை சுமார் 11.00 மணியளவில், சாந்தி தியேட்டர் அருகே ஜெராக்ஸ் கடையில் திருவில்லிபுத்தூர் சார்பதிவாளர் அலுவலக கிரைய பத்திரப்பதிவு எண்.7594/2009 ஆகிய ஆவணத்தை ஒரு சில காரணங்களுக்காக ஜெராக்ஸ் எடுத்துவிட்டு வரும்பொழுது மேற்படி கிரையப் பத்திர அசல் ஆவணத்தை வழியில் எங்கோ தவறவிட்டு சென்றுவிட்டார். மேற்படி ஆவணத்தை கண்டெடுத்தவர்கள் எனது வசமோ, எனது கட்சிக்காரர் வசமோ அல்லது இராஜபாளையம் தெற்கு காவல்நிலையத்தில் ஒப்படைக்க இதன் மூலம் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

R.பாஸ்கர் M.Com.,LLB., அட்வகேட்
157, தேவேந்திர் காம்ப்ளக்ஸ்
ரயில்வே பீடர் ரோடு, இராஜபாளையம்
செல் : 94429 56943

சமஷ்டி உப நயனம்

மதுரை எஸ்.எஸ்.காலனியில் சமஷ்டி உப நயனம் நிகழ்ச்சியில் பங்கேற்றோர்.

● மதுரை

மதுரை எஸ்.எஸ்.காலனியில் சிறுவர்களுக்கு சமஷ்டி உபநயனம் நிகழ்ச்சி நடைபெற்றது.

மதுரை எஸ்.எஸ்.காலனியில், தமிழ்நாடு பிராமண சங்கம் சார்பில் 7 வயதுக்கு மேற்பட்ட பிராமண சிறுவர்களுக்கு சமஷ்டி உபநயனம் (புதிதாக பூநூல் அணிவிக்கும்) நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் 10-க்கும் மேற்பட்ட சிறுவர்களுக்கு தமிழ்நாடு பிராமணர் சங்கம் சார்பில், இலவசமாக சமஷ்டி உபநயனம் செய்து வைக்கப்பட்டது. இதற்கான ஏற்பாடுகளை தமிழ்நாடு பிராமண சங்க நிர்வாகிகள் செய்திருந்தனர்.

சிவகாசி பி.எஸ்.ஆர். கல்லூரியில் 22-வது ஆண்டு தேசிய ஐ.எஸ்.டி.இ மாநாடு

சிவகாசி பிஎஸ்ஆர் கல்லூரியில் நடந்த ஐ.எஸ்.டி.இ. தேசிய மாநாட்டில் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சோஹோ நிறுவன சிஇஓ ஸ்ரீதர் வேம்பு பரிசு வழங்கினார்.

● சிவகாசி

சிவகாசி பி.எஸ்.ஆர். பொறியியல் கல்லூரியில் 22-வது ஆண்டு தேசிய ஐ.எஸ்.டி.இ. மாநாடு நடைபெற்றது.

பி.எஸ்.ஆர். பொறியியல் கல்லூரி இயக்குநர்கள் அருண்குமார், விக்னேஷ்வரி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரி முதல்வர் செந்தில்குமார் வரவேற்றார்.

இன்டெல் நிறுவன முன்னாள் பொறியியல் இயக்குநர் ஆனந்தன் அய்யாச்சாமி பேசுகையில், மாணவர்கள் ஹேக்கத்தான் போன்ற நிகழ்வுகளில் பங்கு பெறுவதன் மூலம் துறை சார்ந்த தொழில்நுட்ப அறிவை வளர்த்துக் கொள்வதோடு, வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று பேசினார். ஐ.எஸ்.டி.இ. தலைவர் பிரதாப்சின் காகஷேப் தேசாய் பேசுகையில், இந்தியாவில்தான் அதிக பொறியாளர்கள் உருவாக்கப்படுகின்றனர். மூன்றில் ஒரு இந்தியர் உலக அளவில் உயர்ந்த பதவியில் உள்ளனர். சமுதாய பயன்பாட்டுக்காக பொறியாளர்கள் புதிய தொழில் நுட்பங்களை கண்டறிய வேண்டும் என்று பேசினார்.

சோஹோ நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி ஸ்ரீதர் வேம்பு பேசுகையில், கற்றுக் கொள்ளும் ஆர்வத்தை அனைவரும் வளர்த்துக்கொள்ள வேண்டும். எண்ணங்கள்தான் செயல்களை மேற்கொள்வதற்கு வழிவகுக்கும். சிறிய விஷயங்கள் தான் பெரிய கண்டுபிடிப்புக்கு வழிவகுக்கும். குழுவாக இணைந்து பணியாற்றுதல், தொழில்நுட்ப அறிவு, ஆங்கிலப் புலமையை மாணவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று பேசினார்.

பல்வேறு மாவட்டங்களில் உள்ள 200-க்கும் மேற்பட்ட கல்லூரிகளிலிருந்து, 2 ஆயிரத்துக்கும் அதிகமான மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

ஆய்வறிக்கை சமர்ப்பித்தல், விநாடி வினா போட்டி, பயிற்சி வகுப்புகள் நடைபெற்றன.

பேராசிரியர் சவுரிராஜன், ஐ.எஸ்.டி.இ. தமிழ்நாடு பிரிவு தலைவர் சங்கரசுப்பிரமணியன், துணைத் தலைவர் பாஸ்கர், ஐ.சி.டி. அகாடமி மாநில தலைவர் பூர்ணபிரகாஷ், முதலாமாண்டு துறைத் தலைவர் செல்வராணி, டீன் மாரிச்சாமி, பொறியியல் கல்லூரி முதல்வர் பாலசுப்ரமணியன் உள்ளிட்டோர் பேசினர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கல்லூரி நிர்வாகத்தினர், பேராசிரியர்கள் செய்திருந்தனர்.

தந்தையை வெட்டிய மகன் கைது

● தேனி

தேனி மாவட்டம், கண்டமனூர் வடக்கு தெருவைச் சேர்ந்த விவசாயி காளிச்சாமி (85). இவருடைய மகன் அழகர் (55). சொத்தை பிரித்துக் கொடுப்பது தொடர்பாக இருவரிடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்தது.

இந்நிலையில் இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டபோது, அழகர் அரிவாளால் காளிச்சாமியை வெட்டினார். அருகில் இருந்தவர்கள் காளிச்சாமியை மீட்டு தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் சேர்த்தனர். கண்டமனூர் போலீஸார் வழக்குப் பதிவு செய்து, அழகரை கைது செய்தனர்.

சுகாதார மைய கூரை இடிந்து விபத்து: உயிர் தப்பிய குழந்தை

● மதுரை

மதுரை நரிமேடு பகுதியில் மாநகராட்சி ஆரம்ப பள்ளி உள்ளது. இதன் வளாகத்தில் செயல்படும் துணை சுகாதார மையத்தின் கூரை திடீரென பெயர்ந்து விழுந்தது. அப்போது, தடுப்பூசி போடுவதற்கு தனது பேத்தியுடன் சென்றிருந்தபோது மணி என்ற மூதாட்டிக்கு லேசான காயம் ஏற்பட்டது. பேத்தி உயிர் தப்பினார். தல்லாகுளம் போலீஸார் விசாரிக்கின்றனர்.

rakeshh.sridhar@hindutamil.co.in

மே 1-ல் விடுமுறை விடாத நிறுவனங்கள் மீது நடவடிக்கை

● தேனி

தேனி தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்) மனுஜ்ஷியாம் ஷங்கர் வெளியிட்ட அறிக்கை: தேனி மாவட்டத்தில் மே 1-ம் தேதி தொழிலாளர்களுக்கு விடுமுறை அளிக்காத 48 நிறுவனங்கள் கண்டறியப் பட்டன. அந்த நிறுவனங்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நகரில் நடப்பவை

மதுரை

- ஆன்மிக இலக்கியப் பொழிவு, மதுரைத் திருவள்ளுவர் கழகம், தலைப்பு- தாயுமானவர், பேசுபவர்- சுந்தர.கண்ணன், வடக்காடி வீதி, இரவு 7.
- சத் சங்கம்- கீதை பாராயணம், திருப்புகழ் பஜனை, தலைமை- சுவாமி சிவானந்த சுந்தரானந்தா, மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் தெற்காடி வீதி, மாலை 6.
- இலவச உயிர் காக்கும் முதலுதவி பயிற்சி, தலைமை- ஏஎன்டி அறக்கட்டளை தலைவர் பேராசிரியர் தி.ஜெயராஜசேகர், பயிற்சியாளர்- பாண்டியன் மருத்துவமனை குழும தலைவர் மருத்துவர் எஸ்.பாண்டியன், கீழவெளி வீதி பாண்டியன் மருத்துவமனை, பிற்பகல் 3.
- சர்வதேச செவிலியர் தின நிகழ்ச்சி மற்றும் புற்று நோயாளிகளுக்கான தலைமுடி தானம் வழங்கும் முகாம், பிரீத்தி செவிலியர் கல்லூரி, உத்தங்குடி, காலை 8.

UJJIVAN SMALL FINANCE BANK

பதிவு அலுவலகம்: கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்கலா 6வது பிளாக், கோரமங்கலா, பெங்களூர்-560095.
கிளை அலுவலகம்: 19/1, தரைத்தளம், வார்டு எண்.71, பாண்டியராஜபுரம் மெயின் தெரு, மஞ்சள்மேட்டு காலனி, நாகு நகர், மதுரை-625016

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்புநடைமுறைவிதிகள்2002 விதி எண்.8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்துக்களை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்க்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்துக்களை, "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் கீழ்க்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

கடன் கணக்கு எண் / கடன்தாரர்கள் பெயர்	(i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி	30.03.2024 அன்றுள்ளபடி கடன் நிலுவைத்தொகை	குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித் தொகை (EMD)
1660210180000017 1. தனசேகரன்.R, S/o.Mr.ராஜூ 2. Mrs.D.தீபா W/o.Mr.தனசேகரன்.R இருவரது முகவரி, எண்.1/125, உச்சபட்டி, திடியன் (அஞ்சல்), ஆர்க் ரோடு, உசிலம்பட்டி, மதுரை-625529	(I) 26.11.2021 (ii) 25.11.2021 அன்றுள்ளபடி ₹ 16,86,389/- (ரூபாய் பதினாறு லட்சத்து எண்பத்தாறாயிரத்து முன்னூற்று எண்பத்தொன்பது மட்டும்) (ii) அடையாளபூர்வ சுவாதீனம் - 16.07.2022 & நேரடி சுவாதீனம் - 08.01.2024	₹ 18,36,158.43 (ரூபாய் பதினெட்டு லட்சத்து முப்பத்தாறாயிரத்து நூற்று ஐம்பத்தெட்டு மற்றும் பைசா நாற்பத்து மூன்று மட்டும்)	₹ 17,05,000/- (ரூபாய் பதினேழு லட்சத்து ஐந்தாயிரம் மட்டும்)	₹ 1,70,500/- (ரூபாய் ஒரு லட்சத்து எழுபதாயிரத்து ஐநூறு மட்டும்)

சொத்து விவரம்: பெரியகுளம் பதிவு மாவட்டம், சிந்துபட்டி சார்பதிவு அலுவலக எல்லைக்குட்பட்ட சர்வே எண்.319/ 9C2, பட்டா எண்.2032 **திடியன் கிராமம், T.உச்சபட்டி, உசிலம்பட்டி தாலுகா, மதுரை மாவட்டம்** என்னும் முகவரியில் **பரப்பு 0.01.0 ஹெக்டேர் இதில் 904½ சதுர அடி நிலம் அதனுடன் அதில் கட்டப்பட்டுள்ள கட்டிடம்,** கதவு எண். 1/260, சொத்து வரி மதிப்பீடு எண்.286 மற்றும் டெபாசிட்டுகள் மற்றும் இதர வசதிகள், அதனுடன் அனைத்து இதர உபகரணங்கள், பொருத்தப்பட்டுள்ளவைகள், அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். அளவுகள்: கிழக்கு மேற்காக வடக்கு திசையில் 33 ½ அடி மற்றும் தெற்கு திசையில் 33 ½ அடி, வடக்கு தெற்காக கிழக்கு திசையில் 27 அடி மற்றும் மேற்கு திசையில் 27 அடி, மொத்தம் 904½ சதுர அடி. எல்லைகள்: வடக்கு : கருப்பதேவர்-க்கு சொந்தமான சொத்து, கிழக்கு: பம்மியாபெரியகருப்பதேவர்-க்கு சொந்தமான சொத்து, மேற்கு: வடக்கு தெற்கு தெரு, தெற்கு: நாகலட்சுமி-க்கு சொந்தமான சொத்து **மேலே குறிப்பிட்டுள்ள சொத்தானது Mrs.D.தீபா-க்கு சொந்தமானது (உங்களில் எண்.2-ல் உள்ள நபர்).**

இ-ஏல தேதி மற்றும் நேரம் : 14.06.2024 காலை 11.00 மணியிலிருந்து மதியம் 01.00 மணி வரை

விலைக்குறிப்பிடுகளை சமர்ப்பிக்க கடைசி தேதி	சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம்
13.06.2024 அன்றோ அதற்கு முன்னரோ காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை	12.06.2024 காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள வேண்டிய வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி :
Mr.G.நடராஜன் - Mob: 95512 77444, Mr.கிருபாகர் ராதாகிருஷ்ணன் - Mob: 94455 08743 & Mr.R.புஷ்பகாந்த் - Mob: 98431 14222

இ-ஏலமானது "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.

இ-ஏலமானது உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட இ-ஏல சேவை வழங்குனரான **M/s.C1 India PVT LTD.** மூலம் நடைபெறவுள்ளது. (தொடர்புக்கு **Mr.**பிரபாகரன் **Mob.74182 81709)** உத்தேச விலைக்குறிப்பீட்டாளர்கள் இணையதளத்தில் உள்ள சொத்துக்களின் விவரங்களுக்கு **https://www.bankeauctions.com or https://www.ujjivansfb.in/e-auctions** பார்வையிடலாம் மற்றும் விலைக்குறிப்பீட்டில் பங்கேற்பதற்காக அவர்கள் தங்கள் பெயரை **https://www.bankeauctions.com**-ல் பதிவு செய்து பயனாளர் ID மற்றும் கடவுச்சொல்லினை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். விருப்பமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் இ-ஏலத்தின் ஆன்லைன் பயிற்சியை சேவை வழங்குனரிடருந்து பெற்றுக் கொள்ளலாம். **M/s. C1 India PVT LTD, Helpline Number's- 7291918824,25,26 support email id:- support@bankeauctions.com, Auction portal - https://www.bankeauctions.com.**

விற்பனை குறித்த விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கடன் கொடுத்த வங்கியின் இணையதளத்தில் பார்க்கலாம்.

i.e., **https://www.ujjivansfb.in/e-auctions / https://www.bankeauctions.com**

தேதி: 02.05.2024
இடம்: பெங்களூர்

ஒப்பம்/-
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்

IIFL FINANCE

CIN: L67100MH1995PLC093797
Regd. Office: IIFL House, Sun Infotech Park, Road No. 16V, Plot No.B-23, Thane Industrial Area, Wagle Estate, Thane - 400604
Tel: (91-22) 41035000 • Fax: (91-22) 25806654
E-mail: reach@iifl.com • Website: www.iifl.com

தங்க ஆபரணங்களை ஏலம் விடுவதற்கான பொது அறிவிப்பு

பதிவு அஞ்சல் மூலம் ஏல அறிவிப்புகள் அனுப்பியும் பலமுறை நினைவூட்டல் செய்த பின்னரும், தங்கள் கடன்களை முறைப்படுத்தாத அல்லது நிலுவைத் தொகையை செலுத்தத் தவறிய வாடிக்கையாளர்களின் தங்கநகை ஆபரணங்களை ஐஐஎஃப்எல் ஃபைனான்ஸ் லிமிடெட் (ஐஐஎஃப்) ஏலம் விடுகிறோம் என்பது குறிப்பாக சம்பந்தப்பட்ட அனைத்து கடன் பெற்றவருக்கும் (களுக்கும்) மற்றும் பொதுவாக பொதுமக்களுக்கும் இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது. பின்வரும் கடன் கணக்குகளில் அடமானம் வைக்கப்பட்ட தங்கநகை ஆபரணங்களின் பொது ஏலம் **இ-புரொக்யூர்மென்ட் டெக்னாலஜிஸ் லிமிடெட்** மூலம் அவர்களின் ஆன்லைன் ஏல தளம் **https://egold.auctiontiger.net ஊடாக 09.05.2024 அன்று மாலை 3:00 மணி முதல் 05:00 மணி வரை நடத்தப்படும்.** இடம் அல்லது தேதியில் செய்யப்படும் மாற்றம் (ஏதேனும் இருந்தால்) குறித்து ஏலம் நடைபெறும் தளம் மற்றும்/அல்லது ஏலம் நடைபெறும் மையத்தில் அறிவிப்பு ஒட்டப்படும். ஏதேனும் தவிர்க்கமுடியாத காரணத்தினால் இங்கு குறிப்பிட்டுள்ள தேதியில் மின்னணு முறையில் ஏலத்தை நடத்த முடியாவிட்டால் அல்லது ஏலத்தை அதே நாளில் முடிக்க முடியவில்லை எனில், அதற்கடுத்த ஒரு தேதியில் அதே விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுடன் அந்தந்த மாவட்டத்திற்குள் அமைந்துள்ள அந்தந்த தாலுகாக்களில் உள்ள ஏலம் நடைபெறும் தளம் மற்றும் / அல்லது ஏலம் நடைபெறும் மையத்தில் மேற்கூறிய ஏலத்தை விடுவதற்கு அல்லது நடத்துவதற்கு ஐஐஎஃப்எல் உரிமை கொண்டுள்ளது. மீதமுள்ள நகைகள் அதற்கடுத்த வேலை நாட்களில் அந்தந்த மாவட்டத்திற்குள் அமைந்துள்ள அந்தந்த தாலுகாக்களில் உள்ள ஏலம் நடைபெறும் தளம் மற்றும்/அல்லது ஏலம் நடைபெறும் மையத்தில் விவரங்களைக் அறிவிப்பு செய்த பின்னர் ஏலம் விடப்படும். வாடிக்கையாளர் இறந்துவிட்டால், ஏலம் தொடர்பான அனைத்து நிபந்தனைகளும் இறந்துபோனவரின் நியமனதாரர் / சட்டப்பூர்வ வாரிசுக்கு பொருந்தும்.

கிளையின் பெயர்: ஆண்டிபட்டி-ஓடைஸ்ட்ரீட். தங்கநகைக் கடன் கணக்கு எண்: GL26922653, GL26945631, GL27157138, GL27163638, GL27239371, GL27289114, GL27373428, GL27536771, GL27555721, GL29263525, GL29265414

கிளையின் பெயர்: போடிநாயக்கனூர்-கடரோடுஜிஎல். தங்கநகைக் கடன் கணக்கு எண் : GL24635121, GL25067329, GL26433319

கிளையின் பெயர்: கம்பம்-எல்எஃப் ரோடுஜிஎல். தங்கநகைக் கடன் கணக்கு எண் : GL25296266, GL25799921, GL25815256, GL26789049, GL27444215, GL27456663, GL28099950, GL28103335, GL28189222, GL29520218, GL29520910, GL31334337

கிளையின் பெயர்: பெரியகுளம்-ஜேடன்பில்டிங். தங்கநகைக் கடன் கணக்கு எண்: GL25366038

கிளையின் பெயர்: தேனீ-மீனாடவர்ஸ்தங்கநகைக் கடன் கணக்கு எண்: GL22348486, GL27619109, GL27622515, GL27624876, GL27644541, GL27646253

இந்த மின்னணு-ஏலம் "உள்ளது உள்ளபடியே", "என்னவோ அப்படியே" மற்றும் "எதுவாக இருந்தாலும்" என்ற அடிப்படையில் நடத்தப்படும் மற்றும் ஐஐஎஃப்எல் இந்த தங்கநகை ஆபரணங்களின் தரம், தூய்மை, கேரட், எடை அல்லது மதிப்பு தொடர்பாக எதுவும் குறிப்பிடாது அல்லது வாக்குறுதி அளிக்காது. ஐஐஎஃப்எல் தனது தனிப்பட்ட விருப்புரிமையின்படி பொருத்தமானது எனக் கருதும் பட்சத்தில் மின்னணு-ஏல செயல்முறை, மின்னணு-ஏலத்தை அடுத்து செய்யப்படும் விற்பனை (ஏதேனும் இருந்தால்) ஆகியவற்றிற்கு சில விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை விதிக்கக்கூடும். ஐஐஎஃப்எல் முற்றிலும் தனது தனிப்பட்ட விருப்புரிமையின்படி, முன் அறிவிப்பு இல்லாமல் மற்றும் எந்தவொரு காரணத்தையும் குறிப்பிடாமல், ஏலப்பட்டியலில் இருந்து ஏதேனும் கடன் கணக்குகளை நீக்கலாம் மற்றும் எந்தவொரு நடவடிக்கைகளையும் தள்ளிவைக்கலாம் மற்றும் எந்தவொரு காரணத்தையும் குறிப்பிடாமல் ஏதேனும் அல்லது அனைத்து ஏலங்களையும் அல்லது சலுகைகளையும் நிராகரிக்கலாம். கடன் தொகையை செலுத்தத்தவறிய கடன் பெற்றவர்களின் விவரங்கள், அடமானம் வைக்கப்பட்ட நகைகள் மற்றும் பிற விவரங்கள் குறித்த அறிவிப்பு அந்தந்த கிளையில் பார்வைக்காக வைக்கப்பட்டிருக்கும். கடனை திருப்பிச்செலுத்த தவறிய கடன் பெற்றவர்(கள்) இந்த அறிவிப்பு வெளியானப் பிறகும்கூட ஆனால் மின்னணு-ஏலம் நடைபெறும் தேதிக்குள்ளாக இன்றையதேதி வரையிலான வட்டி மற்றும் பொருந்தக்கூடிய அனைத்து கட்டணங்கள் உட்பட முழு நிலுவைத் தொகையையும் செலுத்தி தங்கள் கடன் கணக்கை முடித்துவிடலாம் அல்லது முறைப்படுத்தலாம். தவறும்பட்சத்தில் அடமானம் வைக்கப்பட்ட தங்கநகைகள் ஏலத்தில் விற்கப்படும் மற்றும் மீதமுள்ள நிலுவைத் தொகை (ஏதேனும் இருந்தால்) வட்டி மற்றும் செலவுகளுடன் கடன் பெற்றவரிடமிருந்து வசூலிக்கப்படும். ஏலத்தில் விற்பனை செய்யப்படும் நகைகளுக்கு நிலுவைத்தொகையை காட்டிலும் அதிகத்தொகையை பெற்றிருந்தால், அதைப் பெறுவதற்கு, கடன் பெற்றவர்கள் தங்களது சமீபத்திய, வங்கிக் கணக்கு விவரங்களை வழங்குமாறு/புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

விரிவான தகவல், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு ஐஐஎஃப்எல் ஃபைனான்ஸ் லிமிடெட்டின் சம்பந்தப்பட்ட கிளையை அணுகவும்.

தேதி: 04.05.2024
இடம்: தேனீ

கையொப்பம்/-
அங்கீகரிக்கப்பட்ட கையொப்பமிடுபவர்
ஐஐஎஃப்எல் ஃபைனான்ஸ் லிமிடெட்

அறிவிப்பு

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி முத்துப்பட்டினம், பருப்பூரணி தெற்கு, கதவு எண்: 29 என்ற முகவரியில் வசித்து வரும் சிதம்பரம் மனைவி ஞானசௌந்தரி கொடுத்த தகவலின் பேரில் சகலருக்கும் அறிவிப்பது என்னவென்றால்,

என் கட்சிகாரர் கிரையம் பெற்ற கிரைய பத்திரம் அசல் ஆவணங்கள் 1383/1994 24.11.1994-ந் தேதி காரைக்குடி SRO Joint I -ல் பதியப்பட்டதும், 1384/1994 24.11.1994-ந் தேதி SRO Joint I-ல் பதியப்பட்டதும், 337/2000, 07.02.2000 SRO Joint II -ல் பதியப்பட்டதும், 1574/2001, 11.06.2001-ந் தேதி SRO Joint II-ல் பதியப்பட்டதுமான அசல் கிரைய பத்திரங்கள் மற்றும் ரொக்கப்பணம், இதர ஆவணங்கள் வீட்டில் உள்ள பொருட்கள் அனைத்தும் கடந்த 23.10.2020 தேதி அவரது வீட்டில் தீ விபத்து ஏற்பட்டு தீக்கிரையாகி விட்டது. அது சம்மந்தமாக அவரது மகன் காரைக்குடி வடக்கு காவல் நிலையத்தில் புகார் கொடுத்து மனு ரசீது 580/2020 வழங்கப்பட்டுள்ளது. அன்றைய தினம் தீயணைப்பு மீட்புபணிகள் துறை தீ விபத்துக்குள்ளான என் கட்சிகாரர் வீட்டிற்கு சென்று தீ அணைத்ததற்கான சான்று வழங்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி அசல் ஆவணங்களுக்குரிய சான்றிட்ட நகல் பதிவு அலுவலகத்தில் பெற்று அதனடிப்படையில் பத்திர பதிவுகள் செய்வதற்கு யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் தெரிவிக்கலாம் என் அறிவிக்கப்படுகிறது.

ஏவி. ராஜேந்திரன் MA,BL.,
அட்வகேட் & நோட்டரி பப்ளிக்
காரைக்குடி.
மொபைல் : 94438 50795

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித் தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

எமது பதிப்புகள்: சென்னை, புதுவை, வேலூர், கோவை, சேலம், தருமபுரி, திருச்சி, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், நெல்லை, கன்னியாகுமரி

Published by Vijaya Arun at Kasturi Buildings, 859 & 860, Anna Salai, Chennai-600002 and Printed by Sri R.Barathan, Indian, Survey Nos. 38/2 to 40/2B, Madurai-Rameswaram Road, Puliankulam Village, Madurai South Taluk, Madurai-625201 on behalf of KSL MEDIA LIMITED., Chennai-600002. Editor: K. Asokan (Editor responsible for selection of news under the PRB Act).